02.05.2015

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## பெரம்பலூரில் மகா நீர் மேலாண்மைதிட்டம்: விவசாய சங்கம் வலியுறுத்தல்

பெரம்பலூர்,:பெரம்பலூர் மாவட்டத்தில் மகா நீர் மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த வேண்டும் என, தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.தமிழக ஏரி மற்றும் ஆற்றுப்பாசன விவசாயிகள் சங்க தலைவர் விஸ்வநாதன், பெரம்பலூரில் நிருபர்களுக்கு அளித்த பேட்டி:பெரம்பலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவித்து, ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் வழங்கவேண்டும், விவசாயிகள் வாங்கிய பயிர்க் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும். ஒன்பது சதவீதம் முதல், 11 சதவீதம் வரை, மத்திய அரசு வட்டியை உயர்த்தியுள்ளதை வாபஸ் பெற வேண்டும்.முன்பிருந்த ஏழு சதவீத வட்டியே தொடரவேண்டும். புதிய கிணறு, ஆழ்குழாய் கிணறுகள் அமைப்பதற்கு 20 ஆயிரம் ரூபாய் அனுமதி கட்டணம் செலுத்த வேண்டும் என்பது மிகவும் கண்டிக்கத்தக்கது. இதற்கான விதிகள் தளர்த்தப்பட வேண்டும். மாவட்டத்திலுள்ள ஏரிகளை தூர்வாரவேண்டும்.ஆறுகள், மழைநீர் ஓடைகளில் தடுப்பணைகள் கட்டப்பட வேண்டும். கல்லாற்றில் தொண்டமாந்துறை, வெங்கலம், கிருஷ்ணாபுரம், வடகரை, வி.களத்தூர், பேரையூர் ஆகிய பகுதிகளில், தடுப்பணைகள் கட்டவேண்டும்.மலையாளப்பட்டி சின்னமுட்லு அணைக்கட்டு திட்டத்தை அறிவித்து செயல்படுத்த வேண்டும். விசுவக்குடி நீர்த்தேக்கத் திட்டத்தை விரைந்து முடிக்க வேண்டும். ஆலத்தூர் கொட்டரை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு, மத்திய அரசு அறிவித்தபடி நான்கு மடங்கு நில மதிப்பு தொகையும், அவரது குடும்பத்தில், ஒருவருக்கு அரசு பணியும் வழங்க வேண்டும்.தமிழக அளவில் 2,000 பெரிய ஏரிகளை தேர்வுசெய்து,

தூர்வாரி 500 டி.எம்.சி., தண்ணீரை தேக்கிவைக்கும் படி, மகா நீர்மேலாண்மை திட்டத்தை செயல்படுத்த வேண்டும். பெரம்பலூர் மாவட்டத்தில் வேளாண்மை கல்லூரி தொடங்கப்பட வேண்டும். இக்கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, வரும் 13ம் தேதி, பெரம்பலூர் புது பஸ் ஸ்டாண்ட் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தப்படும்.என்று அவர் தெரிவித்தார்.இந்த பேட்டியின்போது, மாவட்ட தலைவர் சின்ராசு, ஒன்றிய தலைவர் செல்வராஜ், உட்பட சங்க நிர்வாகிகள் உடனிருந்தனர்.

## உப்பளங்களில் உற்பத்தி நிறுத்தம்வேதையில் உப்பு விலை அதிகரிப்பு

வேதாரண்யம்,:வேதாரண்யம் பகுதியில், அகஸ்தியன்பள்ளி, கோடியக்காடு, கோடியக்கரை, ஆகிய கிராமங்களில், 5,000 ஏக்கரில் சாப்பாடு உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.இந்த ஆண்டு பிப்ரவரி மாத கடைசியில், உப்பு உற்பத்தி துவங்கிய நிலையில் கடும் வெப்பம் காரணமாக, இதுவரை, அதிகபட்சமாக, 30 ஆயிரம் உப்பு மூட்டைகள் உற்பத்தி செய்யப்பட்டன. இதனால், உப்பு விலை குறையத் தொடங்கியது இந்நிலையில், 15 நாட்களில், இரண்டு முறை விட்டு விட்டு மழை பெய்ததால், வேதாரண்யம் பகுதியில் உள்ள உப்பளங்களில் மழை நீர் தேங்கி, உப்பள பாத்திகள் சேதமடைந்துள்ளது. மழையால், உப்பு உற்பத்தி செய்வதும், தற்காலிகமாக நிறுத்தப் பட்டுள்ளது. உப்பளங்களில் உள்ள தண்ணீரை வடிய வைத்து, பாத்திகளை சீரமைத்து மீண்டும் உப்பு உற்பத்தி துவங்க, ஒரு மாதமாகலாம். இதன் காரணமாக, உப்பின் விலை ஒரு டன், 400 ரூபாயிலிருந்து, 700 ரூபாய் வரை உயர்ந்துள்ளது.இதற்கிடையே, வேதாரண்யம் பகுதியில் மீண்டும் மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை மையம் அறிவித்துள்ளது. இதனால், உப்பு விலை, 1,000 ரூபாய் வரை உயர வாய்ப்பு உள்ளதாக, உப்பு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## மண் மாதிரிகள் சேகரிக்க ஏற்பாடு

திண்டுக்கல்:ஒட்டன்சத்திரத்தில் கிராமங்கள் தோறும் சென்று மண் மாதிரிகள் எடுக்கவும்,பரிசோதனை செய்யவும் வேளாண்மை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஒட்டன்சத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலகத்தில் பண்ணை திட்டத்தில்

மண் வளம் இயக்கம் துவக்கப்பட்டது.அத்திக்கோம்பையில் நடந்த விழாவிற்கு வேளாண்மை இணை இயக்குனர் சம்பத், துணை இயக்குனர் தவமுனி, உதவி இயக்குனர் அமலா உட்பட பலர் பங்கேற்றனர். இதில் கிராமங்கள் தோறும் சென்று மண் மாதிரிகளை எடுத்து பரிசோதனை செய்ய வேண்டும். மண்மாதிரிகளை வேளாண் அதிகாரிகள், உதவி அதிகாரிகள் சேகரிக்க வேண்டும். மண் பரிசோதனையின் அவசியம் குறித்தும் விவசாயிகளிடம் விளக்கவும் அறிவுறுத்தப்பட்டது.

## வைகை பிக்கப் அணையில் மறைத்து நிற்கும் ஆகாயத்தாமரை

ஆண்டிபட்டி:வைகை அணை "பிக்கப்' அணை நீர் தேக்கப்பகுதியில் தண்ணீரை மறைத்து வளர்ந்து வரும் ஆகாய தாமரை செடிகளை அகற்ற பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும். வைகை அணையில் இருந்து திறக்கப்படும் நீர் பெரிய பாலத்தின் வழியாக சென்று இப்பகுதியில் உள்ள பிக்கப் அணையில் தேக்கி வைக்கப்படும். பிக்கப் அணையில் அமைக்கப்பட்டுள்ள கால்வாய் மூலம் தேவையான நேரங்களில் மதுரை, திண்டுக்கல் பகுதிகளின் பாசனத்திற்கு வெளியேற்றப்படும். இங்கிருந்தே ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களின் பாசனத்திற்கு ஆற்றின் வழியாக வெளியேற்றப்படும். பிக்கப் அணையில் உள்ள நீர் மதுரை, ஆண்டிபட்டி-சேடபட்டி குடிநீர் திட்டங்களுக்கு பம்ப் செய்யப்பட்டு அனுப்பப்படுகிறது. பிக்கப் அணை நீர்தேக்கப்பகுதியில்ஆண்டு முழுவதும் ஆகாய தாமரை செடிகள் வளர்ந்து வருகிறது. ஆற்றில் அதிகப்படியான நீர் திறக்கப்படும் காலங்களில் பிக்கப் அணையில் வளர்ந்து நிற்கும் ஆகாய தாமரை செடிகள் வெள்ளத்தில் அடித்துச்செல்லப்பட்டு விடும். கடந்த சில மாதங்களாக ஆற்றில் அதிகப்படியான நீர் திறப்பு இல்லை. இதனால் இப்பகுதியில் வளர்ந்துள்ள ஆகாய தாமரை செடிகள் தண்ணீரை மறைக்கும் அளவில் வளர்ந்து மேற்பரப்பில் படர்ந்துள்ளன. குடிநீரை மாசுபடுத்தும் ஆகாய தாமரை செடிகள் கடந்த ஆண்டு அகற்றப்பட்டது. இந்த ஆண்டு மீண்டும் அதிக அளவில் வளர்ந்து தண்ணீரில் சூரிய ஒளி செல்ல முடியாத அளவுக்கு மேற்பரப்பை ஆக்கிரமித்துள்ளது. ஆகாய தாமரை செடிகளை மீண்டும் அப்புறப்படுத்த பொதுப்பணித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## பறவைகள் கணக்கெடுக்கும் பணி ஆயத்த கூட்டம்

ராஜபாளையம், :மேற்கு தொடர்ச்சி மலையில் ஸ்ரீவில்லிபுத்தூர் சாம்பல் நிற அணில்கள் சரணாலய பகுதிகளில், பறவைகள் கணக்கு எடுக்கும் பணிக்கான ஆயத்த கூட்டம் நேற்று ராஜபாளையத்தில் நடந்தது. சாம்பல்நிற அணில்கள் சரணாலய பகுதிகளாக ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், வத்திராயிருப்பு, சாப்டூர் வனச்சரக பகுதிகள் உள்ளன. இங்கு ஆண்டுதோறும் வனவிலங்கு, பறவை கணக்கெடுக்கும் பணி நடக்கும். இந்த ஆண்டு மார்ச் 8ல் வனவிலங்கு கணக்கெடுக்கப்பட்டது. இதனையடுத்து பறவைகள் கணக்கெடுப்பிற்கான ஆயத்த கூட்டம் நேற்று ராஜபாளையம் ராஜுக்கள் கல்லூரியில் நடந்தது. ரேஞ்சர் பாலசுப்பிரமணியன், வனத்துறை உயிரியலாளர் பார்த்திபன், வார் அமைப்பு நிர்வாகி சுப்பிரமணிய ராஜா, பறவை ஆர்வலர் சந்திரசேகரன், பறவை ஆர்வலர்கள், வனத்துறையினர் கலந்துகொண்டனர். சரணாலய பகுதியில் நான்கு வனச்சரகங்களிலும் நான்குபேர் கொண்ட 15 குழுக்கள் பறவை கணக்கெடுக்கும் பணியில் இருநாள் ஈடுபட உள்ளனர். இந்த குழுவில் இரு பறவை ஆர்வலர், இரு வனத்துறையினர் செல்கின்றனர். குழுவில் மதுரை, புதுச்சேரி, சென்னை, நீலகிரி, பெங்களூரு, கேரளாவை சேர்ந்த பறவை ஆர்வலர்கள், தொண்டு நிறுவனத்தினர்களும் உள்ளனர். மே 3ல்(நாளை) புறப்படும் இந்த குழுவினர் மே 4ல் திரும்புவர். பறவை ஆர்வலர் சந்திரசேகரன், ""வனத்தில் உள்ள பறவைகளை வைத்து, வனத்தின் செழிப்பு கண்டறியலாம். பல்லுயிர் பெருக்கம் எப்படி உள்ளது, புதுமையான பறவைகள் வந்துள்ளதா போன்ற தகவலை சேகரிக்கலாம்," என்றார்.

## நாட்டு படகில் மீன் பிடிப்பு: மீனவர்கள் ஆர்வம்

ராமேஸ்வரம்: விசைப்படகுகளில் மீன் பிடிக்க தடைக்காலம் நீடிப்பதால், ராமேஸ்வரம் தீவு பகுதி மீனவர்கள், நாட்டுப் படகுகளில் மீன் பிடிப்பதில், ஆர்வம் காட்டி வருகின்றனர். மீன் வளத்தை பாதுகாக்க, மீன் பிடி தடைக்காலம் வரும் 29ம் தேதி வரை, அமலில் உள்ளது இதனால், ராமேஸ்வரம் கடல் பகுதி, வெறிச்சோடி உள்ளது. கோடையில் சூடை, கலர், வெங்கணம், முரல் ஆகிய மீன்கள், அதிகளவில் சிக்கும் என்பதால்,

ராமேஸ்வரம், தனுஷ்கோடி, பாம்பன் பகுதி மீனவர்கள், நாட்டுப் படகுகளில் சென்று, மீன் பிடிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 68 அடியாக சரிவு: தலைகாட்டியது நந்தி




மேட்டூர்: மேட்டூர் அணை நீர்மட்டம், 68 அடியாக சரிந்ததால், தண்ணீருக்குள் மூழ்கியிருந்த, ஜலகண்டேஸ்வரர் கோவில் நந்தியின் தலை, நீர்மட்டத்துக்கு வெளியே தெரிகிறது.மேட்டூர் அணையின் மொத்த நீர்மட்டம், 120 அடி. அணை நீர்மட்டம், 69 அடியாக உயரும்போது, பண்ணவாடி நீர்பரப்பு பகுதியிலுள்ள ஜலகண்டேஸ்வரர் கோவில் நந்தியும்; நீர்மட்டம், 78 அடியாக உயரும்போது, அங்கிருந்து, 3 கி.மீ., தொலைவில், நாயம்பாடி நீர்பரப்பு பகுதியிலுள்ள கிறிஸ்தவ ஆலய இரட்டை கோபுரமும் நீரில் மூழ்கி விடும். கடந்த, பிப்., 4ம் தேதி அணை நீர்மட்டம், 77 அடியாக சரிந்தபோது, கிறிஸ்தவ ஆலயத்தின் இரட்டை கோபுர முகப்பு வெளியில் தெரிந்தது. கடந்த, 14ம் தேதி, நீர்மட்டம், 71 அடியாக குறைந்தபோது, ஒரு கோபுரம் மட்டுமே வெளியில் தெரிந்தது; மற்றொரு கோபுரம் மாயமாகி விட்டது. கோபுரம் மாயமானது தொடர்பாக, பொதுப்பணித் துறை அதிகாரிகள் விசாரித்து, அரசுக்கு அறிக்கை அனுப்பிஉள்ளனர். மேட்டூர் அணை நீர்மட்டம் அதிகரித்ததால், கடந்த ஆண்டு ஜூலை, 26ம் தேதி, ஜலகண்டேஸ்வரர் கோவில் நந்தி, நீருக்குள் மூழ்கியது. நீர்மட்டம் நேற்று, 68 அடியாக குறைந்ததால், 10 மாதங்களுக்கு பின், நந்தியின் தலை நீருக்கு வெளியே தெரிகிறது. நேற்று மே தின விடுமுறை என்பதால், ஏராளமான சுற்றுலா பயணிகள் பண்ணவாடி நீர்பரப்பு பகுதிக்கு சென்று நந்தி சிலையை ரசித்தனர். மேட்டூர் அணை நீர்மட்டம், 68 அடியாகவும், நீர் இருப்பு, 31

டி.எம்.சி.,யாகவும் இருந்தது. வினாடிக்கு, 6,000 கன அடியாக இருந்த நீர்திறப்பு, நேற்று காலை, 3,000 கன அடியாக குறைக்கப்பட்டுள்ளது.

## அக்கரைப்பட்டி விவசாயியின் அக்கறை: நீர்மேலாண்மையில் புது 'டெக்னிக்'

திண்டுக்கல்: வறட்சியை சமாளிக்க திண்டுக்கல் விவசாயி ரவிச்சந்திரன், தனது நிலத்தில் நிரந்த மழைத் தூவான்களை அமைத்து விவசாயம் செய்கிறார். திண்டுக்கல் மாவட்டத்தில் 3 ஆண்டுகளாக எதிர்பார்த்த மழை பெய்யவில்லை. வறட்சியால் பலர் விவசாய நிலங்களை தரிசாக விட்டுள்ளனர். திண்டுக்கல் பகுதியில் பெரும்பாலான கிணறுகளில் நீர் இல்லை. இதனால் 'போர்வெல்' நீரை கிணற்றில் நிரப்பி, அதிலிருந்து நிலங்களுக்கு பாய்ச்சுகின்றனர். சமீபகாலமாக 'போர்வெல்'லிலும் மிக குறைவான நீரே கிடைக்கிறது. அவற்றை சிக்கனமாக பயன்படுத்த அக்கரைப்பட்டி விவசாயி ரவிச்சந்திரன் தனது நிலத்தில் நிரந்தர மழைத் தூவான்களை அமைத்துள்ளார். நான்கு ஏக்கரில் ரூ.4 லட்சத்தில் 35 தூவான்கள் அமைத்துள்ளார். ஒவ்வொரு மழைத் தூவானும் ஒரு சென்ட் பரப்பில் தண்ணீரை தெளிக்கின்றன. இதனால் குறைவான நேரத்தில் பயிர்களுக்கு தேவையான தண்ணீர் கிடைக்கிறது. பயிர்களை பாதிக்காத வகையில் தூவான்களுக்கான குழாய்கள் தரைக்கு கீழே பதிக்கப்பட்டுள்ளன. அரசு மானியத்தில் வழங்கப்படும் தூவான்களை ஒரு குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். அவை எளிதில் சேதமடையும். ஆனால் நிரந்தர தூவான்களை அனைத்து வகை பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். அவற்றை பல ஆண்டுகளுக்கு பயன்படுத்தலாம்.

விவசாயி கூறியதாவது: சம்பங்கி, மல்லிகை, வாழை, மக்காச்சோளம் பயிரிட்டேன். நீர் பற்றாக்குறையால் பயிர்கள் கருகின. இதை தடுக்க நிரந்தர தூவான்களை அமைத்தேன், என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## கோத்தகிரியில் காய்கறிக் கண்காட்சி இன்று தொடக்கம்



கோத்தகிரியில் கோடை விழா, 8-ஆவது காய்கறிக் கண்காட்சி சனிக்கிழமை (மே 2) தொடங்குகிறது.ஆண்டுதோறும் கோடைவிழா, கோத்தகிரியில் காய்கறிக் கண்காட்சியுடன் தொடங்கி, உதகையில் மலர்க் கண்காட்சி, குன்னூரில் பழக் கண்காட்சி, கூடலூரில் வாசனை திரவியக் கண்காட்சியுடன் நிறைவடையும்.வழக்கம்போல, இந்த ஆண்டும் கோத்தகிரி நேரு பூங்காவில் மே 2-ஆம் தேதி கோடை விழா தொடங்குகிறது. தோட்டக்கலைத் துறை சார்பில் நடைபெறும் இந்த விழா சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் தொடங்குகிறது.விழாவையொட்டி, பூங்காவுக்குள் 20 அரங்குகள், பல்வேறு காய்கறிகளாலான சிற்பங்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன. இதில், நீலகிரி, கன்னியாகுமரி, கோவை, தேனி, திருப்பூர், ஈரோடு உள்ளிட்ட 10 மாவட்டங்களைச் சேர்ந்த தோட்டக்கலைத் துறையினர் கலந்துகொள்கின்றனர்.நீலகிரி மாவட்ட தோட்டக்கலைத் துறை சார்பில் 450 கிலோ பச்சை, மஞ்சள், சிவப்பு வண்ண குடை மிளகாய்களால் 30 அடி நீளம், 12 அடி உயரம், 5 அடி அகலம் கொண்ட ஹெலிகாஃப்டர் அமைக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமை தொடங்கும் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை மாலை பரிசளிப்பு விழாவுடன் நிறைவடையும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

**பால் கொள்முதலை நிறுத்தக் கூடாது: சங்கத் தலைவர்**

பால் உற்பத்தி அதிகரிப்பைக் காரணம் காட்டி, கொள்முதல் செய்வதை ஆவின் நிர்வாகம் நிறுத்தக் கூடாது என, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச் சங்கத்தின் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல் தெரிவித்தார்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் நலச் சங்கத்தின் மாநிலச் செயற்குழுக் கூட்டம் சேலத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதுதொடர்பாக அந்தச் சங்கத்தின் மாநிலத் தலைவர் கே.ஏ.செங்கோட்டுவேல் செய்தியாளர்களிடம் கூறியதாவது:தமிழகத்தில் ஆவின் நிறுவனம் ரூ.7 கோடிக்கு பால் வியாபாரம் செய்கிறது. ஆவின் பால் கிடைக்காததால்தான் நுகர்வோர்கள் தனியார் நிறுவனங்களின் பாலை வாங்குகின்றனர். நுகர்வோர் தேவைக்கேற்ப ஆவின் பாலைச் சந்தைப்படுத்துவதில் பால் வளத் துறை அக்கறை கொள்வதில்லை. கொள்முதல் செய்யும் அனைத்து பாலையும் விற்க முடிவெடுக்க வேண்டும்.இதனால், பால் பொருள்கள் தயாரிப்பில் ஏற்படும் நஷ்டத்தில் இருந்து விடுபட முடியும். பாலை முழுவதுமாகக் கொள்முதல் செய்து சந்தைப்படுத்த வேண்டும்.உதாரணமாக, ஆவின் நிர்வாகம் மூலம் மட்டும் 30.20 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது. இதில், 10 சதவீத அளவுக்கு பால் கொள்முதலை ஆவின் நிர்வாகம் திடீரென நிறுத்தி வைத்துள்ளது. இது தவிர்க்கப்பட வேண்டும்.கடந்த சில நாள்களாக பால் உற்பத்தி அதிகரித்துள்ளது. இதனால், கூட்டுறவு சங்கங்களில் இருந்து பெறப்படும் பாலின் அளவை 10 சதவீத அளவுக்குக் குறைத்துக் கொள்ள ஆவின் நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.இதனால், உற்பத்தியாகும் பாலை முழுமையாக விற்பனை செய்ய முடியாத நிலைக்கு பால் உற்பத்தியாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர். பால் உற்பத்தி அதிகரித்துள்ள நிலையில், பால் உற்பத்தியாளர்களிடம் இருந்து முழுமையாக கொள்முதல் செய்வதோடம், உபரி பாலை அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்களில் சிறார்களுக்கு விநியோகம் செய்ய வேண்டும்.

பால் உற்பத்தி பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் தாற்காலிக இழப்பை ஆவின் நிர்வாகம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்தப் பிரச்னை அடுத்த 15 நாளில் முடியும்.

அதுவரை பால் உற்பத்தியாளர்களிடம் பால் கொள்முதல் செய்வதை ஆவின் நிர்வாகம் நிறுத்தக் கூடாது என்றார்.

**கோடை சாகுபடி: நெல்லை மாவட்டத்தில் 9,500 ஏக்கரில் நெல், உளுந்து நடவு**

திருநெல்வேலி மாவட்டத்தில் கோடைக்கால சாகுபடியாக 5,500 ஏக்கரில் உளுந்துப் பயிரும், 4,000 ஏக்கரில் நெற்பயிரும் நடவு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் துறை இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் தெரிவித்தார்.தாமிரவருணி பாசனத்தில் 2014இல் வடகிழக்குப் பருவமழை அதிகமாக பெய்ததால் இம் மாவட்டத்தில் உள்ள 12 அணைகளும் நிரம்பின. இதையடுத்து, இப்பாசனத்தில் பிசான பருவத்தில் முழு அளவில் நெல், வாழை போன்றவை சாகுபடி செய்யப்பட்டன.பிசான சாகுபடி அறுவடை முடிந்த நிலையில் பாபநாசம், சேர்வலாறு, மணிமுத்தாறு உள்ளிட்ட அணைகளில் நீர்இருப்பு கணிசமாக இருந்ததால் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றும் முன் கார் பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் பாபநாசம் அணையிலிருந்து தூத்துக்குடி மாவட்டம், ஸ்ரீவைகுண்டம் பகுதியில் 8,124 ஏக்கர் நிலங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.மணிமுத்தாறு அணையிலிருந்து பெருங்கால் மதகு பாசனம் பெறும் 2,756.62 ஏக்கர் நிலங்களுக்கு வெள்ளிக்கிழமை தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது. இதனிடையே, மணிமுத்தாறு பிரதான கால்வாய் பாசனத்தில் உள்ள குளங்களில் உள்ள நீர்இருப்பைக் கொண்டு முதல், 2ஆவது மதகு பாசனத்தில் 10 ஆயிரம் ஏக்கரில் நெல் நடவு செய்யப்பட்டுள்ளது.இதுகுறித்து திருநெல்வேலி வேளாண் இணை இயக்குநர் செ. சந்திரசேகரன் வெள்ளிக்கிழமை கூறியதாவது: பிசான சாகுபடிக்கு பாசனத்துக்கு தண்ணீர் திறக்கப்பட்டு தற்போது பாசனக் குளங்களில் இருப்புள்ள நீரைக் கொண்டு திருநெல்வேலி மாவட்டத்தில் கோடைக்கால சாகுபடிப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.பிசான பருவம் அறுவடை செய்த நிலங்களில் விவசாயிகள் 5,500 ஏக்கரில் உளுந்தும், 4,000 ஏக்கரில் நெல்லும் சாகுபடி செய்துள்ளனர். ஜூன் மாதம் கார் சாகுபடி பணிகளைத் தொடங்குவதற்கு முன்பாக உளுந்து அறுவடை மேற்கொள்ளப்படும். இதுதவிர பருத்தி, சோளம், சிறு தானிய வகைகளும் பயிரிடப்பட்டுள்ளன என்றார் அவர்.நீர்மட்ட நிலவரம்: வெள்ளிக்கிழமை நிலவரப்படி நீர்மட்ட நிலவரம்: பாபநாசம் அணை 73.15 அடி,

சேர்வலாறு 86.51 அடி, மணிமுத்தாறு 84.96 அடி, கடனாநதி 54.10 அடி, ராமநதி 38 அடி, கருப்பாநதி 34.45 அடி, குண்டாறு 15.40 அடி, அடவிநயினார் 21 அடி, வடக்குப் பச்சையாறு 23 அடி, நம்பியாறு 13.09 அடி, கொடுமுடியாறு அணை 2.50 அடி.ஜூன் முதல் வாரம் திறப்பு? திருநெல்வேலி மாவட்டத்தில் பிரதான அணைகளில் நீர் இருப்பு கணிசமாக உள்ளதால், தாமிரவருணி பாசனத்தில் கார் பருவ சாகுபடிக்கு ஜூன் முதல் வாரத்தில் தண்ணீர் திறக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. தென்மேற்குப் பருவமழை ஜூன் மாதத்தில் தொடங்கினால்தான் அணைகளுக்கு நீர்வரத்து கிடைக்கும் என்ற நிலையில் அணைகளில் நீரை சேமித்துவைக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு**

மேட்டூர் அணையிலிருந்து குடிநீருக்குத் தண்ணீர் திறந்துவிடுவது நொடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது.

மேட்டூர் அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்காக நொடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில், வெள்ளிக்கிழமை காலை 7 மணி முதல் குடிநீருக்குத் திறக்கப்படும் நீரின் அளவு நொடிக்கு 3 ஆயிரம் கன அடியாகக் குறைக்கப்பட்டது. இதையடுத்து, வெள்ளிக்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.03 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 1,640 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையின் நீர் இருப்பு 31.03 டி.எம்.சி.யாக இருந்தது. நீர்வரத்தைவிட நீர் திறப்பு அதிகமாக இருப்பதால், அணையின் நீர்மட்டம் வேகமாகக் குறைந்து வருகிறது.

**மீனவர்கள் சர்வதேச சட்டங்களை பின்பற்ற வேண்டும்**

சர்வதேச சட்டங்களை மீனவர்கள் முறையாகப் பின்பற்ற வேண்டும் என்றார் மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ்.புதுக்கோட்டை மாவட்டம், மணமேல்குடியில் மீன்வளத் துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற மீனவர்கள் குறை கேட்பு முகாமுக்கு தலைமை வகித்து 28 பயனாளிகளுக்கு ரூ. 3.66 லட்சத்தில் நலத் திட்ட உதவிகளை வழங்கி அவர் மேலும் பேசியது:மீனவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும்

நோக்கில் மாதம்தோறும் மீனவர்கள் குறை கேட்கும் முகாம் நடத்தப்படுகிறது. அதனடிப்படையில் நடைபெறும் இம்முகாமில் வீட்டுமனைப்பட்டா, முதியோர் உதவித்தொகை, இலவச வீடு போன்ற கோரிக்கைகளுக்காக பெறப்பட்ட 73 மனுக்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மணமேல்குடி ஒன்றியத்தில் உள்ள 209 விசைப்படகுகளுக்கு எரிபொருள் எளிதாகக் வழங்குவதற்காக புதிய பெட்ரோல் நிலையம் அமைப்பது, புதை சாக்கடைத் திட்டம், சாலை வசதி, வலைப்பின்னுவதற்கென புதியக் கட்டடம், இரட்டை மடிவலைகளைப் பயன்படுத்தி மீன்பிடிப்பதைத் தடை செய்வது போன்ற கோரிக்கைகளை மீனவர் சங்க உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். இக்கோரிக்கைகள் அனைத்தையும் நிறைவேற்ற மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்றார்.

இதில் வருவாய்த் துறை மூலம் 5 பேருக்கு தலா ரூ. 1,000-ம் மதிப்பில் இந்திரா காந்தி தேசிய முதியோர் உதவித்தொகையும், மீனவர் நல வாரியத்தின் மூலம் உறுப்பினர்களின் குழந்தைகள் 18 பேருக்கு ரூ. 52,500-ம் கல்வி உதவித்தொகை, ரூ. 3.08 லட்சம் மதிப்பில் 50 சதவீத மானியத்தில் மீன்பிடி நாட்டுப்படகுகளில் பொருந்தும் இயந்திரங்கள் 5 பேருக்கு என மொத்தம் 28 பயனாளிகளுக்கு ரூ. 3.66 லட்சம் மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. இதில் திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) எம். சந்தோஷ்குமார், மீன்வளத் துறை உதவி இயக்குநர் சேகர், நோ0முக உதவியாளர் (வேளாண்மை) நாகேந்திரன், ஒன்றிய குழுத் துணைத் தலைவர் சின்னகருப்பன், கடலோர காவல்படை கமாண்டர் பி.எஸ். சிங் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**பெரம்பலூரில் விவசாயக் கண்காட்சி தொடக்கம்**

பெரம்பலூர் ரோவர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் விவசாயக் கண்காட்சி வியாழக்கிழமை தொடங்கியது.ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையம் மற்றும் ஸ்ரீ விவேகானந்தா விஷன் சர்பில் ஏப். 30 முதல் மே 3 வரை விவசாயக் கண்காட்சி நடைபெறுகிறது. இந்தக் கண்காட்சியில், மாவட்ட நிர்வாகம் சார்பில் அமைக்கப்பட்டுள்ள 10

அரங்குகள் உள்பட 60 அரங்குகள் உள்ளன.இதில், விவசாயிகளுக்குத் தேவையான நவீன தொழில்நுட்பக் கருவிகளும், சோலார் மின் திட்டம், இயற்கையை பாதுகாக்கும் வழிமுறைகள், பயிர்களை சேதப்படுத்தி வரும் பூச்சிகளைக் கட்டுப்படுத்தும் அட்டைகள், பெங்களூரிலிருந்து கொண்டுவரப்பட்ட ரோஜா செடிகளும் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.மேலும், நாள்தோறும் விவசாயிகளுடனான கலந்துரையாடல், கருத்தரங்கம், பயிர் சாகுபடி குறித்த ஆலோசனைகளும், விவசாயம் சார்ந்த சமையல், ஓவியம், கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு பெற்றி பெறுவோருக்கு பரிசுகளும் வழங்கப்படுகின்றன.கண்காட்சி தொடக்க விழாவுக்கு, தந்தை ரோவர் கல்வி நிறுவனங்களின் தாளாளர் கே. வரதராஜன் தலைமை வகித்தார்.

வேளாண் அறிவியல் மைய திட்ட ஒருங்கிணைப்பாளர் (பொ) ப. விஜயலட்சுமி, கரூர் டி.என்.பி.எல் பொது மேலாளர் பி. ராமகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.விவசாயக் கண்காட்சியை, மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது தொடக்கி வைத்து பார்வையிட்டார்.தொடர்ந்து, ஆத்தூர் ராசி விதை நிறுவனத் தலைவர் மு. ராமசாமி, வேப்பந்தட்டை பருத்தி ஆராய்ச்சி மையத் தலைவர் ஆர். கவிமணி, ரோவர் வேளாண் கல்லூரி முதல்வர் ஜி. அஸ்லாம் பாஷா, கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் சி. முத்துக்குமாரசாமி, கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் அப்சல், வேளாண் பொறியியல் துறை செயற்பொறியாளர் என். ராஜேந்திரன் ஆகியோர் பேசினர்.வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுநர் ஜெ. கதிரவன் வரவேற்றார். விவேகானந்தா விஷன் தலைவர் மோ. மாரிமுத்து நன்றி கூறினார்.

**கொள்முதல் நிலையம் மூலம் பருத்தி கொள்முதல்**

கொள்முதல் நிலையம் அமைத்து பருத்தி விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்ய வேண்டுமென விவசாயிகள் குறைதீர்க் கூட்டத்தில் வலியுறுத்தப் பட்டது.திருவாரூர் ஆட்சியரகத்தில் ஆட்சியர் எம். மதிவாணன் தலைமையில் வியாழக்கிழமை நடைபெற்ற கூட்டத்தில் விவசாயிகள் பேசியது:வெ. சத்தியநாராயணன் (காவிரி டெல்டா விவசாயிகள் குழுமப் பொதுச் செயலர்): மழையால் பருத்தி சாகுபடி

பாதிக்கப்படும் சூழலில் பருத்திக்கான காப்பீடு பிரிமீயத் தொகையும் அதிகமாகி விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். பருத்தி விவசாயத்தை, விவசாயிகளை மத்திய, மாநில அரசுகள் காக்க வேண்டும்.

துரைசிங்கம் (கொரடாச்சேரி): அஸ்கான் ஓடை உள்ளிட்ட பகுதிகளில் காமராஜர் காலத் தில் போடப்பட்ட மின்கம்பங்கள், மின்வயர்கள் பழுந்தடைந்து கீழே விழுந்து கால்நடைகள் பலியாகி வருகின்றன. அஸ்கான்ஓடை பகுதிக்கு கால்நடை மருத்துவர்கள் வரவும், கொரடாச்சேரி - வையகளத்தூர் சாலையைச் சீரமைக்கவும் வேண்டும்.

வி. பாலமுருகன் (பேரளம்): பேரளம் தொடக்க வேளாண் கூட்டுறவுக் கடன் சங்கத்தில் இயங்கிவரும் உழவு இயந்திரங்களுக்கு டீசல் மானியம் வழங்க வேண்டும்.தம்புசாமி (கரும்பு விவசாயிகள் சங்கம்): கரும்பு டன்னுக்கு ரூ. 3,500 விலை நிர்ணயம் செய்ய வேண்டும். நீலனூர் காட்டாற்றில் மணல் திட்டுகளை அகற்றி தூர்வாரி மழைக் காலங்களில் கிடைக்கும் நீரை விவசாயத்துக்குப் பயன்படுத்த வேண்டும்.பி.ஆர். பாண்டியன் (அனைத்து விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்புக் குழு): தூர்வாரும் பணியை உரிய காலத்தில் செய்ய வேண்டும். எலி ஒழிப்புப் பணியை தொடங்க வேண்டும்.சின்னதம்பி (அகரதிருநல்லூர்): அம்மையப்பன் - திருக்கண்ணமங்கை சாலையைச் சரி செய்ய வேண்டும், ராஜன் வாய்க்காலைத் தூர்வார வேண்டும்.முகேஷ் (குடவாசல்): கால்நடை மருத்துவர்களின் தவறான சிகிச்சையால் எனது கால்நடை உயிரிழந்தது. இழப்பீடு கோரி அணுகியும் உரிய நிவாரணம் கிடைக்கவில்லை.சேதுராமன் (குடவாசல்): கோடை சாகுபடிக்கு தேவையான நெல்விதை வழங்க வே ண்டும். உரத்தட்டுப்பாடு இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.துரைராஜன் (வலங்கைமான்): பெருங்குடி கிராமத்தில் வடிகால் வாய்க்கலைச் சரிசெய்து தூர்வாரும் பணியை மேற்கொள்ள வேண்டும்.கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் த. மோகன்ராஜ், வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாகனன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ராஜேந்திரபிரசாத், பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் ரவிச்சந்திரன், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல மேலாளர் ஆ. அழகிரிசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

# மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறப்பு குறைப்பு



மேட்டூர்,

மேட்டூர் அணையில் இருந்து தண்ணீர் திறக்கும் அளவு வினாடிக்கு 3 ஆயிரம்கனஅடியாகநேற்றுகுறைக்கப்பட்டுள்ளது.6 ஆயிரம் கனஅடி நீர் மேட்டூர் அணையில் இருந்து கடந்த பிப்ரவரி மாதம் முதல் குடிநீர் தேவைக்காக தண்ணீர் திறந்து விடப்பட்டு வருகிறது. தொடக்கத்தில் அணையில் இருந்து வினாடிக்கு 500 கனஅடி வீதம் திறந்து விடப்பட்ட தண்ணீர், குடிநீர் தேவைக்கு ஏற்றவாறு அதிகரித்தும், குறைத்தும் திறந்து விடப்பட்டு வருகிறது. இதன்அடிப்படையில் அதிகபட்சமாக வினாடிக்கு 2 ஆயிரம் கனஅடி வரை தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த நிலையில், சென்னை மாநகர குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு, வீராணம் ஏரிக்கு தண்ணீரை அனுப்புவதற்காக கடந்த 25-ந் தேதி முதல் மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு 6 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீர் திருச்சி மாவட்டம் கீழ் அணைக்கட்டு வழியாக சென்னையில் உள்ள வீராணம் ஏரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது.தண்ணீர்திறப்புகுறைப்புஇவ்வாறு திறந்து விடப்பட்ட தண்ணீர் வீராணம் ஏரியை சென்றடைந்துள்ளது. இதையடுத்து கடந்த ஒரு வாரத்திற்கு பிறகு நேற்று காலை முதல் வினாடிக்கு 3 ஆயிரம் கனஅடியாக தண்ணீர் திறக்கும் அளவு குறைக்கப்பட்டுள்ளது. கடந்த சில தினங்களாக வேகமாக குறைந்து வந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம், தண்ணீர் திறப்பு குறைப்பின்

காரணமாக தற்போது மெதுவாக குறைந்து வருகிறது. அணையின் நேற்றைய நீர்மட்டம் 68.03 அடியாக காணப்பட்டது. அணைக்கு வினாடிக்கு 1,646 கனஅடி நீர் வந்து கொண்டு இருக்கிறது.

**மீன்பிடி தடைக்காலம் தொடங்கியதையடுத்து மீன்களின் விலை கிலோவுக்கு ரூ.40 முதல் ரூ.100 வரை அதிகரிப்பு**



மீன்பிடி தடைக்காலம் தொடங்கியதையடுத்து மீன்களின் விலை கிலோவுக்கு ரூ.40 முதல் ரூ.100 வரை அதிகரித்துள்ளதாகவும், வஞ்சிரம் மீன் வரத்து குறைவாக உள்ளதாகவும் வியாபாரிகள் தெரிவித்தனர். மீன்பிடிதடைக்காலம் தமிழகத்தில் மீன்பிடி தடைக்காலம் கடந்த ஏப்ரல் மாதம் 15-ந்தேதி தொடங்கியது. அதில் இருந்து 45 நாட்களுக்கு மீனவர்கள் ஆழ்கடலுக்கு மீன்பிடிக்க செல்லமாட்டார்கள். அதுபோன்ற சமயங்களில் கட்டுமரங்கள் மூலம் சென்று குறுகிய தூரத்தில் பிடிக்கப்படும் மீன்கள் மட்டுமே விற்பனைக்காக மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படும்.

அதுமட்டுமில்லாமல், மீன்பிடி தடைக்காலங்களில் அண்டை மாநிலங்கள் மற்றும் பிற பகுதிகளில் இருந்து லாரிகள் மூலம் மீன்கள் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றன. மீன்பிடி தடைக்காலத்தினால் மீன்வரத்து பெருமளவில் குறைந்துள்ளது. இதனால், கட்டுமரம், தூண்டிலில் பிடிக்கப்படும் மீன்களின் விலையும் அதிகரித்துள்ளது. மேலும் வெளி மாநிலங்களில் இருந்து விற்பனைக்கு கொண்டு வரப்படும் மீன்களுக்கு போக்குவரத்து செலவு அதிகமாக இருப்பதால் அந்த மீன்களின் விலையும் உயர்ந்துள்ளது.

ரூ.40 முதல் ரூ.100 வரை உயர்வு
இந்த நிலையில் சென்னையில் மீன்வரத்து குறைவாக இருப்பதால் மீன்மார்க்கெட்டுகளில் விற்பனை செய்யப்படும் மீன்களின் விலை கிலோவுக்கு ரூ.40 முதல் ரூ.100 வரை உயர்ந்துள்ளது. இதுகுறித்து அகில இந்திய மீனவர் சங்க அமைப்பு செயலாளர் டி.பன்னீர் செல்வம் கூறியதாவது:-

மீன்பிடி தடைக்காலம் தொடங்கினால் பொதுவாகவே மீன்களின் விலை உயர்ந்து காணப்படும். அந்த வகையில் தற்போது விற்பனை செய்யப்படும் மீன்களின் விலை கிலோவுக்கு ரூ.40 முதல் ரூ.100 வரை அதிகரித்துள்ளது.

தமிழ்நாட்டை போலவே ஆந்திராவிலும் தற்போது மீன்பிடி தடைக்காலம் தான். எனவே, நம்முடைய அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, கோவா, மராட்டியம், ஆகிய மாநிலங்களில் இருந்து லாரிகளில் மீன்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.
வஞ்சிரம்மீன் அங்கிருந்து கொண்டு வரப்படும் பெரும்பாலான மீன்கள் வானகரம், செங்குன்றம், சிந்தாதிரிப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ள மீன்மார்க்கெட்டுகளுக்கு அதிகளவில் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. தற்போது நாளொன்றுக்கு 10 லாரிகளில் மீன்கள் விற்பனைக்கு வருகின்றன. ஒரு லாரியில் சுமார் 3 முதல் 5 டன் வரை மீன்கள்இருக்கும். ஆனால் இதில் வஞ்சிரம் மீன் வரத்து குறைவாக தான் இருக்கிறது. இருப்பினும் அதன் விலை ஏற்ற இறக்கத்துடன் இருந்து வருகிறது. ஒரு நாள் உயர்ந்தும், மறுநாள் குறைந்தும் காணப்படுகிறது. இனிவரக்கூடிய நாட்களில் அதிகளவு மீன்கள் பிறபகுதிகளில் இருந்து லாரிகள் மூலம் தான் வரும். எனவே மீன்பிடி தடைக்காலம் முடியும் வரை, மீன்களின் விலை சற்று உயர்ந்து தான் இருக்கும்.
மீன்மார்க்கெட்டுகளில் நேற்று விற்பனை செய்யப்பட்ட மீன்களின் விலை (ஒரு கிலோ) நிலவரம் வருமாறு:- (அடைப்புக்குறிக்குள் மீன்பிடி தடைக்காலத்துக்கு முன்பு விற்பனை செய்யப்பட்ட விலை நிலவரம்)
விலைநிலவரம்

வஞ்சிரம் மீன் - ரூ.450 முதல் ரூ.500 வரை, சீலா மீன் - ரூ.200(160), பெரிய சங்கரா மீன் - ரூ.200 முதல் ரூ.220 வரை(160 முதல் ரூ.180 வரை), சின்ன சங்கரா மீன் - ரூ.140(ரூ.100), தும்பிலி மீன் - ரூ.120(ரூ.80),

கிளிச்சை - ரூ.80, மத்திமீன் - ரூ.80(ரூ.40), நெத்திலி மீன் - ரூ.180(ரூ.130), அயிலா மீன் - ரூ.180(ரூ.110 முதல் ரூ.120 வரை), நண்டு - ரூ.200(ரூ.160), பாறை மீன் - ரூ.220(ரூ.180), கிழங்கா மீன் - ரூ.300 (ரூ.180 முதல் ரூ.200 வரை).
இவ்வாறு அவர் கூறினார்.

**தென்னை சார்ந்த தொழில் தொடங்க மானியம் அதிகாரி தகவல்**



தென்னை சார்ந்த தொழில் தொடங்க மானியம் வழங்கப் படுவதாக தென்னை வளர்ச்சி வாரிய அதிகாரி பரமசிவம் கூறினார். தென்னைநாற்றுப்பண்ணைமத்திய தென்னை வளர்ச்சி வாரிய சென்னை மண்டல கள அதிகாரி பரமசிவம் கூறியத £வது:-

தென்னை வளர்ச்சி வாரியத்தில் பதிவு செய்துள்ள தென்னை உற்பத்தி யாளர்கள், சங்க உறுப்பினர் களுக்கு பல் வேறு விதமான மானியங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாட்டில் ரூ.26 கோடி மதிப்பில் 4079 விவசாயி களுக்கு இலவசமாக இடு பொருட்கள் வழங்கப்பட் டுள்ளன. இதில் கோவை மாவட் டத்திற்கு மட்டும் ரூ.6 கோடிக்கு வழங்கப்பட்டுள் ளன. தென்னை வளர்ச்சி வாரியத்தில் கடந்த நிதி ஆண்டில் செலவிடப்படாத தொகை செயல்விளக்க பண்ணை திட்டத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட் டுள்ளன. இதன் மூலம் இந்த ஆண்டு கூடுதலாக 1500 எக்டேர் பரப்பளவிற்கு இடு பொருட்கள் வழங்கப் படும். அடுத்த ஆண்டு முதல் தென்னையில் ஊடுபயிர் செய்ய வாழைக் கன்றுகள் வழங்கப்படும்.

தென்னை நாற்று உற்பத்தி செய்யும் பண்ணை இந்தியா வில் 7 இடங்களில் உள்ளது. இதை தொடர்ந்து கூடுதலாக தமிழ்நாட்டில் உடுமலையில் புதிதாக நாற்றுப்பண்ணை தொடங்கப்பட்டுள்ளன.

தென்னை நாற்றுக்கள் தயாரித்து வழங்கும் திட்டத் திற்கு மானியம் வழங்கப் படுகின்றன. 6250 நாற்றுக்கள் தயாரிப்பதற்கு ரூ.50 ஆயிர மும், 25 ஆயிரம் நாற்றுக் களுக்கு ரூ.2லட்சமும் மானியமாக வழங்கப்படு கின்றன.தென்னைமரம்ஏறபயிற்சி

மேலும் தரமான தென்னை நெற்றுக்காய் தயாரிக்க 25 சதவீத மானியம், அதிகபட்ச மாக ரூ.6 லட்சம் மானியம் கிடைக் கும். டெக்னலாஜி விஷன் திட்டத்தில் தென்னை சார்ந்த தொழில் நுட்ப கருவி கள் தயாரிப்பவர்களுக்கு 25 சதவீத மானியம் வழங்கப் படும். தென்னை சார்ந்த 45 வகை தொழில் கள் செய்து ஏற்றுமதி செய்ய வாய்ப்பு உள்ளது. இதற்கு திட்டச் செலவில் 25 சதவீதம் மானியம் வழங்கப்படு கிறது. ரூ.50 லட்சம் வரை மானியம் பெறலாம். கிராமங்களில் படித்து வேலை இல்லாத இளைஞர் களுக்கு 6 நாள் தென்னை மரம் ஏறும் பயிற்சி இலவசமாக அளிக்கப்பட்டு வருகின்றன. பயிற்சிக்குப் பிறகு ரூ.2800 மதிப்பிற்கு மரம் ஏறும் எந்திரம் வழங்கப்படுகின்றன. தென்னை மரங்களி லிருந்து நீரா (பதனீர்) தயாரித்து விற்பனை செய் வதன் மூலம் தேங்காயை விட அதிக லாபம் பெறலாம்.

அதற்கான தொழில் நுட்ப பயிற்சியை தென்னை வளர்ச்சி வாரியம் அளிக் கிறது. வாரியத்தில் பதிவு பெற்ற தென்னை உற்பத்தி யாளர் சங்கங்கள் தொடங்கி வாரியத்தில் பதிவு செய்ய தென்னை விவசாயிகள் ஆர்வம் காட்ட வேண்டும். தென்னை மரங்களுக்கு காப்பீடு செய்வதற்கு காப்பீட்டு தொகையில் 50 சதவீதத்தை தென்னை வளர்ச்சி வாரியம் ஏற்கிறது. இவ்வாறு அவர்கூறினார்.

**கேசர்குளி அல்லா அணைக்கு தண்ணீர் கொண்டு வர பெட்டமுகிலாளம் பள்ளம் ஆற்றின் குறுக்கே தடுப்பணை-புதிய கால்வாய் அமைக்கும் பணி கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார்**

கேசர்குளி அல்லா அணைக்கு தண்ணீர் கொண்டு வர பெட்ட முகிலாளம் பள்ளம் ஆற்றின் குறுக்கே தடுப் பணை- புதிய கால் வாய் அமைக்கும் பணியை கலெக்டர் விவேகானந்தன் தொடங்கி வைத்தார். தடுப்பணை

தர்மபுரி மாவட்டம் பாலக் கோடு அருகே உள்ள கேசர் குளிஅல்லா அணையின் பாசன வசதியை அதிகரிக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்து இருந்தனர். இதை ஏற்று கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக் கோட்டை வட்டம் பெட்ட முகிலாளம் பள்ளம் ஆற்றில் இருந்து தடுப்பணை கட்டி, அங்கிருந்து கால்வாய் மூலம் சேகர்குளி அல்லா அணைக்கு தண்ணீர் கொண்டு வர நட வடிக்கை மேற்கொள்ளப் பட் டது.இது தொடர்பாக நபார்டு வங்கி உதவியுடன் இந்த திட் டத்தை செயல்படுத்த ரூ.1 கோடி ஒதுக்கீடு செய்து அதற் காக ஆணையை தமிழக அரசு வெளியிட்டது. அதன்படி 25 மீட்டர் நீளத்திற்கு தடுப்பணை கட்டி, 160 மீட்டர் நீளத்திற்கு நீர்வழங்கு கால்வாய் வெட்டு வதற்கான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டது. இந்த புதிய தடுப்பணை மற்றும் புதிய கால்வாய் அமைக்கும் பணிக் கான பூமி பூஜை நேற்று நடை பெற்றது.குறைவானமழைஇந்த பணியை கே.பி.அன்பழ கன் எம்.எல்.ஏ. முன்னிலையில் கலெக்டர் விவேகானந்தன் பூமி பூஜையை தொடங்கி வைத்தார். இதில் மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர் நாகராஜன், ஒன்றியக்குழு தலைவர் கருணாகரன், தாசில் தார் தமிழரசன், கூட்டுறவு சர்க்கரை ஆலை தலைவர் ரங்கநாதன் மற்றும் கூட்டுறவு சங்க தலைவர்கள் சரவணன், சுப்பிரமணி, பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் பாலசுப்பிரமணியம், உதவி செயற்பொறியாளர் குமார் உள்பட பலர் கலந்துகொண்டனர்.அப்போது கலெக்டர் கூறு கையில், சேகர்குளி அல்லா அணையின் நீர்ப் பிடிப்பு பகுதியில் கடந்த பல ஆண்டு களாக குறைவான மழை பெய் தது. இதன் காரணமாக அணைக்கு வரும் நீர் வரத்து குறைந்து தண்ணீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இவற்றை சரி செய்யும் பொருட்டு இந்த தடுப்பணை மற்றும் கால்வாய் வெட்டி உபரி நீர் கொண்டு வருவதன் மூலம் கூடுதல் தண்ணீர் வந்து சேரும். இதன் மூலம் கிடைக்க பெறும் கூடுதல் நீரை கொண்டு கேசர்குளி அல்லா அணையின் ஆயக்கட்டு தரப் பான 4 ஆயிரம் ஏக்கர் நிலங் களின் தண்ணீர் தேவையை ஈடுசெய்யலாம் என்று கலெக் டர் விவேகானந்தன் கூறி னார்.

**பர்கூர் மலைப்பகுதியில் பலாப்பழ சீசன் தொடங்கியது**



அந்தியூர் அருகே உள்ள பர்கூர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களில் பலாமரங்கள் வளர்க்கப்பட்டு வருகிறது. தற்போது பலாப்பழ சீசன் தொடங்கியுள்ளது. இந்த சீசனில் கடந்த ஆண்டை விட மரத்தில் அதிக அளவில் பலாப்பழங்கள் காய்த்து தொங்குகின்றன.

இதுகுறித்து மலைக்கிராம மக்கள் கூறும்போது, 'பர்கூர் மலைப்பகுதியில் விளையும் பலாப்பழங்களை மலைக்கிராம மக்கள் தாமரைகரை மற்றும் பர்கூர் துருசணம்பாளையம் பகுதியில் வைத்து விற்பனை செய்து வருகிறார்கள். பலாப்பழ சுளைகளை பர்கூர் வழியாக செல்லும் பஸ் பயணிகள் வாங்கி செல்கின்றனர். மேலும் சுற்றுலா பயணிகள் பலாப்பழ சுளைகளை வாங்கி சுவைத்து, மலைப்பகுதியின் அழகை ரசித்தபடி செல்கின்றனர்' என்றார்கள்.

**இயற்கை உரங்கள் தயாரிப்பதனால் அதிக மகசூல் பெறலாம் கலெக்டர் ஜெயந்தி தகவல்**



திடக்கழிவு மேலாண் மை திட்டத்தின் மூலம் இயற்கை உரங்கள் தயாரிப்பதனால் அதிக மகசூல் பெறலாம் என்று கலெக்டர் ஜெயந்தி

தெரிவித்தார். ஆய்வு: கரூர் மாவட்டம், க.பரமத்தி ஊராட்சி, செம்மாண்டாம் பாளையம் கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் உரங்கள் தயாரிக்க மேற்கொள்ளப்பட்டு வரும் திட்ட பணிகளை கலெக்டர் ஜெயந்தி ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது செம்மாண்டாம் பாளை யத்தில் ஊராட்சிக்கு சொந்தமான 5 ஏக்கர் பரப்பளவு கொண்ட பகுதியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் உரங்கள் தயாரிப்பதற்காக ரூ.1 லட்சத்து 37 ஆயிரம் மதிப்பீட்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பணிகள் நடைபெற்று வருவதை கலெக்டர் பார்வையிட்டுபேசினார்.அப்போதுஅவர்கூறியதாவது:-அதிகமகசூல்

கரூர் மாவட்டத்தில் முதல் கட்டமாக 22 கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டம் செயல்பட திட்டமிட்டு அதற் குரிய பணிகள் முழு அளவில் நடைபெற்று வருகின்றன. இதற்குமுன் நகராட்சி, பேரூராட்சி பகுதிகளில் இத்திட்டம் தொடங்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. கிராமப் பகுதிகளில் தேங்கும் குப்பை களை சேகரித்து தரம்பிரித்து திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் மூலம் இயற்கை உரங்கள் தயாரிப்பதால் இந்த உரங்கள் விவசாயத்திற்கு பயன்படுத்தும் போது அதிக மகசூல் கிடைக்கின்றன.மேலும் அதிக அளவில் இயற்கை உரங்கள் தயாரிக்கும் போது ஊராட்சிப் பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு தேவையான இயற்கை உரங்களை குறைந்த விலையில் வழங்குவதன் மூலம் ஊராட்சிக்கும் வருவாய் கிடைக்கும். 265 பழவகை மரக்கன்றுகள் தற்போது க.பரமத்தி ஊராட்சியில் தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூ.5 லட்சம் மதிப்பீட்டில் 265 பழவகை மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்காக ஒவ்வொரு ஊராட்சிக்கும் எந்திரங்கள், தளவாட பொருட்கள் வாங்குவதற்காக ரூ.25 ஆயிரம் வழங்கப்படுவதுடன் மேலும் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் பணியாளர்களுக்கு பணி களும் வழங்கப்படும். இவ் வாறு அவர் கூறினார். இந்த ஆய்வின் போது க.பரமத்தி ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் முரளிகண்ணன், புவனேஸ்வரி, அரவக்குறிச்சி வட்டாட்சியர் உதயகுமார் மற்றும் அரசு அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண் டனர்.

**நாமக்கல்லில் 2,500 மூட்டை பருத்தி ரூ.32 லட்சத்துக்கு ஏலம்**



நாமக்கல்லில் 2 ஆயிரத்து 500 மூட்டை பருத்தி ரூ.32 லட்சத்துக்கு ஏலம் போனது. பருத்தி ஏலம் நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென் னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம் பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 2 ஆயிரத்து 500 மூட்டை பருத்தியை விற் பனைக்கு கொண்டு வந்திருந் தனர். ரூ.32 லட்சத்துக்கு விற்பனை

இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.32 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 736 முதல் ரூ.4 ஆயிரத்து 297 வரைக்கும், டி.சி.எச்.ரக பருத்தி குவிண் டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 962 முதல் ரூ.4 ஆயிரத்து 569 வரைக்கும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணா புரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

முன்குறுவை சாகுபடிக்கு மணிமுத்தாறு அணை திறக்கப்பட்டது



முன்குறுவை சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை நேற்று திறக்கப்பட்டது. இதன் மூலம் 2,756 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.மணிமுத்தாறு அணை திறப்பு மணிமுத்தாறு அணையில் இருந்து முன்குறுவை சாகுடிக்கு தண்ணீர் திறக்க வேண்டும் என்று பெருங்கால் பாசனத்திற்கு உட்பட்ட கிராம மக்கள் அரசுக்கு கோரிக்கை விடுத்தனர். இதை ஏற்று மணிமுத்தாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்க தமிழக அரசு உத்தரவிட்டது. இந்த நிலையில் முன்குறுவை சாகுபடிக்காக மணிமுத்தாறு அணை நேற்று திறக்கப்பட்டது. மாவட்ட வருவாய் அலுவலர் குழந்தை வேல் தலைமை தாங்கி, அணையை திறந்து வைத் தார். அப்போது, அவர் கூறுகையில், மணிமுத்தாறு அணையில் தற்போது, 84.96 அடி தண்ணீர் உள்ளது. அம்பை தாலுகாவைச் சேர்ந்த ஜமீன் சிங்கம்பட்டி, அயன்சிங்கம்பட்டி, வைராவிகுளம், தெற்கு பாப்பான்குளம், மூலச்சி, தெற்கு கல்லிடைக்குறிச்சி உள்பட 2,756 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும். இன்று (நேற்று) முதல் ஆகஸ்டு மாதம் 31-ந் தேதி வரை பாசனத்திற்காக தண்ணீர் வழங்கப்படும். விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றார். அதிகாரிகள் நிகழ்ச்சியில், பொதுப்பணித்துறை கண்காணிப்பு பொறியாளர் அப்துல் அமீது, உதவி பொறியாளர்கள் குமாரசாமி, மாயமுருகன், சுப்பிரமணியன், வேளாண்மை துறை உதவி இயக்குனர் சுந்தரம், வைராவிகுளம் பஞ்சாயத்து தலைவர் முத்துக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினகரன்

**வேளாண் பல்கலையில் ஹோம்சைன்ஸ் பாடத்திட்டம் மாற்றியமைப்பு**

கோவை, : தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தில் உணவு மற்றும் ஊட்டசத்து பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக துணை வேந்தர் ராமசாமி தெரிவித்தார். இது குறித்து அவர் கூறியதாவது:

நடப்பாண்டில் ஹோம் சைன்ஸ் என்ற பாடத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. அதன்படி, உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் ஹோம் சைன்ஸ் பாடத்திட்டம் பி.எஸ்.சி புட் சைன்ஸ் அண்ட் நியூட்ரிசியன் என மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. இது நான்கு வருட படிப்பு. 201516 கல்வியாண்டில் 40 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், போலி கல்வி சான்றிதழ் தொடர்பாக வரும் பிரச்னைகளுக்கு தீர்வு காண 17 பாதுகாப்பு அம்சங்களை கொண்ட புதிய வகை சான்றிதழை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்காக தனியாக ஒரு குழு ஆய்வு செய்து வருகிறது. முதுகலையில் செமஸ்டர் முறை அறிமுகப்படுத்தப்பட்டதை தொடர்ந்து அனைத்து டெக்னிக்கல் பேப்பருக்கும் எழுத்து தேர்விற்கு 50 மதிப்பெண், பிராட்டிக்கலுக்கு 50 மதிப்பெண் என கொண்டுவரப்பட்டுள்ளது. மேலும், வரும் கல்வியாண்டில் மாணவர் சேர்க்கையில் மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, திருநங்கைகளுக்கு என சிறப்பு இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதே போல் ஜம்புகாஷ்மீர் மாணவர்களுக்கு ஒவ்வொரு பாடப்பிரிவிலும் 2 இடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார்.

**சேரன்மகாதேவி வட்டாரத்தில் உளுந்து விளைச்சல் அதிகரிக்க ஆலோசனை**

வீரவநல்லூர், : சேரன்மகாதேவி வட்டாரத்தில் உளுந்து விளைச்சல் அதிகரிக்க விவசாயிகளுக்கு வேளாண்மை துறை யோசனை தெரிவித்துள்ளது.சேரன்மகாதேவி வட்டாரத்தில் சுமார் 300 ஹெக்டர் பரப்பளவில் நஞ்சை தரிசு உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. தற்போது உளுந்து பயிரானது டி.ஏ.பி கரைசல் தெளிக்கும் நிலையில் உள்ளது. உளுந்து பயிரில் பூக்கள் உதிர்வதை தடுக்கவும், மகசூல் அதிகரிக்கவும் டி.ஏ.பி உரக்கரைசல் தெளிப்பது அவசியம். எனவே 4 கிலோ டி.ஏ.பி உரத்தினை முதல்நாள் இரவு 10 லிட்டர் நீரில் ஊற வைத்து சிறிது நேர இடைவெளியில் குச்சியினால் கரைசலை கலக்கிவிடவும். பின்னர் மறுநாள் காலை தெளிந்த நீரை வடிகட்டி 190 லிட்டர் நீரில் கலந்து செடி முழுவதும் நனையுமாறு கைத்தெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். பின்னர் இதுபோல் பூக்கும் தருணத்தில் ஒருமுறையும், 15 நாள் கழித்து ஒருமுறையும் தெளிப்பதால் மகசூலை அதிகரிக்கலாம் என்று சேரன்மகாதேவி வட்டார வேளாண் உதவி இயக்குநர் சத்தியஜோஸ் தெரிவித்துள்ளார்.